Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL I. { புதுவை, பவ-௵ ஆனி-௴ ௧௫-௳ (28—6—34) } No. 31.

## திருமந்திரம்

ஆறு தெருவி லகப்பட்ட சந்தியிற்
சாறு படுவன நான்கு பனையுள
வேறற் கரியதோ ரேணியிட் டப்பனை
யேறலுற் றேன்கட லேழுங்கண் டேனே.

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினர் தோட்டக் குடிகண்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.

மூவணை யேரு முழுவது முக்காணி
தாமணை கோலித் தறியுறப் பாய்ந்திடு
நாவணை கோலி நடுவிற் செறுவுழார்
காலணை கோலிக் களருழு வாரே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்)

# வித்தகம்

புதுவை,
பவ-௵ ஆனி-௴ 15௳

## அருணோதயம்

அருணோதயம் என்றால் என்னை? அது தான் சூரிய உதயம்—ஆதித்தியன் உதயம் என்று கூறப்படும். அருண + உதயம் = அருணோதயம். அருணன் = சூரியன். புறத்தே அருணன் உதயமாகும் போது இருள் நீங்குதல் கண் கூடு. இதனால் புற விஷயங்கள் காணப்பட்டு ஆவன செய்யப்படுகின்றன. சகல சீவராசிகளும் அருணோதயத்தால் ஆம் பயனை அடைகின்றன. இதுபோலவே, அஃதாவது அண்டத்துக்கு ஒத்ததே பிண்டத்துக்கும் ஆம் என்றவாறு, நமது சரீரமாகிய பூமியுள்ளும் அருணோதயம் ஆதல் வேண்டும். அப்பொழுது தான் அகவிருள் எனப்படும் அறியாமை—அஞ்ஞானம் இரியும்—நீங்கும்; முன்னிலைகளின் இயல்பு வாய்மையாக அறியப்படும். பின்வரும் பிரமாணத்தால் இவ் உண்மையைக் கண்டு தெளிக:

### இருக்கு வேதம்

அஷ்டகம் 1—அத்தியாயம் 6.

வருக்கம் 25.

மண்டலம் 1, அநுவாகம் 14,
சூக்தம் 7, இருக்குக்கள் 23.

வானுறு தமஞ் சதிப்பாள், வயங்குயி
[ருணர்த்தித் தானே
யீன மார்ந் தொளிக்கு மல்லை யேகுவித்,
[துகங்கள் மாந்த
ருனமில் வகைபடைத்த வுவற்றினை
[யுடைத்துச் சாரன்
றனுகர் காந்தை தன்கண் கொண்டொளி
[சார்த்துவாளே. (11)

(இ-ள்.) இருளை யழிக்கும் ஜாரனாகிய சூரியனது காந்தையும், வானத்தின்கணுள்ள இருளை யொழிப்பவளுமாகிய உஷை எல்லாப் பிராணிகளையும் துயிலுணர்த்தித் தானாகவே யொளிந்து கொள்ளுகிற இருட்டையோட்டி, மனிதர்கள் ஏற்படுத்தியுள்ள (கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்னும்) கால நிர்மாணங்களைப் போவதும் வருவதுமாக ஹிம்ஸித்துத் தனது சொந்தப் பிரகாசத்தினால் விளங்குவாள்-(எ.று) யுகம் காலவளவை. "ஸ்வஸாரம்" என்னும் வடமொழிப் பதத்திற்கு உடன் பிறப்பு என்று பொருள் கூறுவர். இரவும் உஷஸும் உடன் பிறப்புக்களாம். ஆனால் சாயணரோ, "ஸ்வயமேவ ஸாந்தீம் நிசாம்." = தானே போகும் நிசியை என்பார். "சாரன், ஜாரன்ராத்ரே: ஜாயிது: ஸூர்யன்." இரவை மறையும்படி செய்பவன், அதாவது சூரியன் என்பார் சாயணர்.
(ஸாயணா-வித்யாரஸ்யாஸ்.)

நமது சரீரத்துள் அருணன் எனப்படுவது யாது? எனின், அது தான் "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய சிவம் என்னும் செம்பொருள் என்பது. நந்தி ஒளி—அமல ஒளி—அமல நிறை—அமல ஐகாரம் எனப்படுவது இதுவே என்க. பின்வரும் பிரமாணங்கள் நம் உடலகத்து ஒளிர்கின்ற சிவம் என்னும் செஞ்ஞாயிற்றின் இயல்பை நன்கு புலப்படுத்தும்.

### திருவாசகம்

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றி ஒன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகால்
ஆயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

[ஷை—கோயிற்றிருப்பதிகம் 7, 6.)

### மைத்திராயண்ணியுபநிஷத்

"இருதய கமலத்துள் வாசஞ்
"செய்து கொண்டு எவன் அன்னத்
"தைப் புஜிக்கிறானோ அந்த அக்கி
"னியே ஆகாசத்தில் சூரிய தேஜஸாக
"இருந்து கொண்டு காலன் என்கிற
"பெயரை அடைந்து கண்ணுக்குக்
"காணப்படாமல் சகல பிராணிகளை
"யும் அந்நமாகப் பக்ஷிக்கிறான்......
"பிர்மத்துக்கு மூர்த்தம் அமூர்த்தம்
"என இரண்டு ரூபங்கள் உண்டு. எது
"மூர்த்தமோ (உருவமோ அது அசத்
"தியமானது. அமூர்த்தம் எதுவோ
"அது சத்தியமானது. இதுதான்
"ப்ரம்மம். அதே தேஜஸ். எது
"தேஜஸோ அது சூரியன். இந்த
"சூரியன் தான் ஓம் என்கிற
"ஆத்மா ஆனவன். அந்த சூரியன்

"(பிரணவமாகிய) தன்னை மூன்று
"விதமாகச் செய்தான். ஓம் என்றது
"மூன்று மாத்திரைகள். (அவையா
"வன: அ, உ, ம்,) இவைகள் தான்—
"இந்த மூன்று மாத்திரைகள் தான்
"அவயவங்கள். இவைகளினாலே
"இந்தப் பிரபஞ்சம் குறுக்கும்
"நெடுக்குமாய்(குறுக்கும் நெடுக்குமாய்
"நெய்யப்பட்டிருக்கும் துணிபோல)
"சோக்கப்பட்டிருக்கிறது. இது தான்
"என்று சூரியன் சொன்னான். இந்த
"ஆதித்தனை ஓங்காரமென்று தியா
"னஞ் செய்யுங்கள். உங்களுடைய
"ஆத்மாவைச் சூரியனிடத்தில்
"சேருங்கள். ஆத்மாவை சூரியனிடத்
"திலும் சூரியனை ஆத்மாவிடத்திலும்
"சேர்த்து ஏகமாய்ப் பாவியுங்கள்.
"இந்த விஷயத்தைக் குறித்துச் சாந்
"தோக்கிய உபநிடதத்திலும் (1—5)
"சொல்லப்பட்டிருக்கிறது."

## இருக்கு வேதம்

அஷ்டகம் 3 அத்தியாயம் 7,

336 (40) மண்டலம் 4, அநுவாகம் 3, சூக்தம் 8. இருக்குக்கள் 5.

வருக்கம் 13

அம்ஸனொளி சார்தலத்தே யமர்கின் [றோன்,
வசுவென்றே யந்தரிட்சத்
திம்சையற விருப்பவன், ஹோதா வேதி
தனிலுறைவோன், இலத்த மர்ந்து
செம்மைபெறு மதிதி, நரரிடையுறை [வோன்,
சிறந்தவிடஞ் சேர்வோன், மெய்ம்மை
கம்மிவற்றி லுறைபவனீர் பசு, ரிதங் கற்
பிறந்தவன்மெய் காட்டு மூழே.

(இ-ள்.) எல்லாவிடத்துஞ் செல்லும் ஹம்ஸன் ஒளிநிறைந்த விடத்தே ஸூர்யனாக அமர்பவனும்; அந்தரிட்சத்தில் வாயுவாக அமர்பவனும்; (பூமியிலுள்ள) வேதிஸ்தானத்தில் ஹோதாவாகிய (அக்கினியாக) அமர்பவனும்; மனிதர்களுக்கிடையே (சைதன்ய ரூபமாக) அமர்பவனும்; சிறந்த சூரிய மண்டலத்திலமர்பவனும்; ரிதமாகிய ஸத்தியத்தி லுறைபவனும்; கம் ஆகிய வியோமத்தி லுறைபவனும்; தண்ணீரில் (வடவையாகப்) பிறந்தவனும்; பசுக்களிடத்துப் (கிரணங்களிடத்து என்றபடி) பிறந்தவனும்; ரிதத்தினிடத்துப் (ஸத்யம், யக்ஞம், விதி அல்லது ஊழ், ப்ரஹ்மம் இவற்றுள் எதையேனும் கொள்ளுக) பிறந்தவனும்; உண்மையைக் காட்டும் ரிதமே அவனும்—(எ.று)

## பிரகதாரண்ய உபநிடத தாத்பர்ய வர்ணனம்

"கடவுள் இருக்கு, யஜுர், சாமம்
"என்னும் மூன்று வேதவடிவினரா
"வர். தினத்தின் முதற் பாகத்தில்
"இருக்கு வேத வடிவமாய் இலங்கா
"நிற்பர். தினத்தின் மத்திம பாகத்
"தில் யஜுர் வேத ரூபமாயிலங்கா
"நிற்பர். அந்திய பாகத்தில் அதர்வ
"அங்கிரசத்தோடு கூடிய சாமவேத
"மாய் ஒளிரா நிற்பர். உலகத்தின்
"கண்ணே பிரசித்தமாய மது,புருஷர்
"களின் ஆனந்தத்திற்குக் காரணமா
"வது போல, வசு முதலிய தேவதை
"கட்கு ஆநந்த ஹேதுவாயதும்,
"சர்வ கர்மங்களின் பலத்தைக்
"கொடுப்பதுமாய ஆதித்திய ரூப மது
"வின் கண் எப்போதும் விளங்கா
"நிற்பர். அவ் வாதித்திய ரூப மது
"வானது இரக்தம், சுக்லம், கிருஷ்
"ணம், அதிகிருஷ்ணம், குஹ்யம் என்
"னும் ஐந்து பிரகாரங்களோடு கூடி
"யிருக்கும். கூறிய முறையே இரக்
"தாதி ரூபங்களையுடைய இருக்கு,
"யஜுர், சாமம், அதர்வாங்கிரசம்,
"உபநிஷத் என்னும் ஐந்து வகையாய
"வேத ரூப வண்டினங்களால் சேர்க்
"கப் பெற்றது. உலகின் கண்ணே
"தேனீயானது புஷ்பங்களினின்றும்
"ரசத்தைக்கவர்ந்து மது வைத்திருக்கு
"மிடத்தில் கொண்டுபோய்ச்
"சேர்க்கும். அது போல, இருக்கு
"வேத முதலிய வண்டினங்கள் யாக
"முதலிய கர்மரூப புஷ்பங்களிடத்தே
"மந்திர வடிவமாயடைந்து யாகாதி
கர்மங்களின் சூக்ஷ்ம அவஸ்தைவடிவ
"புண்ணிய ரூப வதிர்ஷ்டமாகிய ரசத்
"தை ஆதித்ய மதுவின்கண் கொண்டு
"சேர்க்கும்."

இவ்வாறு வரும் உபநிடதப் பிரமாணங்கள் பல. விரிப்பிற் பெருகும்.

நமது சரீரமாகிய இல்லினுள் அருளுதயம் காண்டலே அவ் இல்லைத் திறத்தல்—துறத்தல் என்பது. துறத்தல் துரத்தல் என்பன ஒன்றே. துரதல் என்றால் என்னை? அதுதான் மாயையாகிய திரையை—மறைப்பை நீக்குதல் என்பது — கபாடம் திறத்தல் என்பது—மறைக்காட்டுக் கதவம் திறத்தல் என்பது. கதவம் திறத்தலால் கன்னிவனம் அடையப்படும்—கன்னிவனம் என்னும் ஐவனம் அடையப்படும். வாய்மையான வேத ஆரணியம் இதுவே என்க.

கன்னிவனம் அடைதலாற்றான் அருளுதயம் காணப்படும்—சிவம் என்னும் செம்பொருள்—அமல நந்தி ஒளி காணப்படும். மறையாய் இருக்கும் சிவம்–கபாடித்திருக்கும் சிவம் காணப்படும். கடவுளைக் காண்பதென்பது இதுவே என்க.

இதனால் ஆகும் பேறு என்னை? எனின், அதன் அருமை பெருமையை யாரே இயம்பவல்லார்? பின்வரும் பிரமாணம் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

## திருமந்திரம்.

மெய்த்தா ளகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள்கொண் டாருந் திறந்தறி வாரில் [லைப்
பொய்த்தா ளிடும்பையைப் பொய்யற நீ [விட்டங்
கத்தா டிறக்கி லரும்பேற தாமே.

வம்பு பழுத்த மலர்ப்பழ மொன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தானொட்டா
தம்புகொண் டெய்திட் டகலத் துரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே.

(ஷை 8-ம் தந். 28வது-வாய்மைசெ.11,13.)

மேலை யணுவில் விரைந்திரு காலிடிற்
காலனு மில்லை கதவுந் திறந்திடு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பாரநந்தி யாணையே.

(ஷை3-ம்தந். 10வது கேசரியோகம் செ.7.)

## தனிப்பாடல்

இன்னதிதுவென் றிறைவன் றிறமதனைச்
சொன்னமறையுந் துணிந்தறியாதம்மானை
சொன்னமறையுந் துணிந்தறியாதாமாயின்
கன்னிவனமடைந்தால்காணலாம் அம்
[மானை
கண்டார்பிறிதொன் றும்காணார்காண்
அம்மானை.

மேலே காட்டிய பிரமாணங்களால் கதவம் திறந்து மறைக்காடு என்னும் கன்னிவனம் அடையப்பெற்றோரே —அடைதலால் சிவம் என்னும் செஞ்ஞாயிற்றைக் காணப்பெற்றோரே பிணி முப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து நித்தியத்துவம் அடைதல் திருவருள் ஆணை ஆதல் நன்கு வற்புறுத்தப் பட்டமை கண்டு கொள்க. "பாரா நந்தி ஆணையே" என ஆணை தந்தவர் எம் அண்ணலாகிய திருமூலர் அல்லவா? வேத உண்மை இதுவே ஆதலை அறியாது மனப்பான்மையால் வேறு தடம் புகுந்து உடல் பிணமானபின் நித்தியத்துவம் அடையலாம் — சிவகதி பெறலாம் என அரற்றி அமைவார் அறியாமையை என்னென்று கூறுவது?

அருணன் உதயமானால் இருள் இரிந்துவிடும் என யாவரும் எளிதாகக் கூறுவர். அருணனை உதயமாகும்படி செய்வது என்றால் எளிதன்று. சற்குருநாதனால் அருளப்படும் சாதக யோகங்களாற்றான் "கைத்தாள்" என்னும் "தீக்கை" யாற்றான் வாய்மையான ஒழுக்கத்தினாற்றான் இப்பெற்றி கைவரப்பெற வேண்டும். அருணோதயம் ஆனபோது தான் அகவிருள் எனும் அஞ்ஞானம் அகலும்—யாவற்றையும் இருந்தாங்கிருந்து உள்ளவாறே அறியும் ஆற்றல் உளதாகும்—ஞான நேத்திரம் உளதாகும் என்க. இதனைப் பெற்றாலன்றி நாம் ஒன்றையும் வாய்மையாக அறியமுடியாது. இவ் அக ஒளியை—மைய முள்ளை—அகக்கண்ணைப் பெறாத விடத்து நாமெல்லாம் குருடர்களே — அஞ்ஞானிகளே. இருளில் பழுதையைப் பாம்பென்று மயங்கி அஞ்சி ஓடியவன் சூரியன் உதயமானதும் அதனைப் பழுதை எனக் கண்டு மயக்கம் தீர்ந்து களிப்படைகின்றான். இது போலவே நம்முள்ளும் அருணோதயமானபோது தான் மாயையின் வரலாறு அறியப்படும். இப் பெற்றி கைவரப் பெறாது இருளாகிய மாயை வலையில் அகப்பட்டு மயங்கி நின்று "மாயை எப்படி வந்தது? அது உள் பொருளா? இல் பொருளா" என்று இன்னோரன்ன பலவற்றைச் சாதலடையக்கற்ற குட்டிக் கல்வி வன்மையால் உழறிக் குழறிச் சர்ச்சை விளைப்பதால் உண்மை கண்டு உய்தி அடைய முடியுமா? முடியாது. மயக்கம் என்னும் அறியாமையால் வாதம் புரிந்து சாதலடைவதே யன்றி ஆம் பயன் வேறில்லை என்பது வெள்ளிடை.

தம்முள்ளே அருணோதயம் ஆகப் பெற்றவரே மாயையைக் கண்டவர்—வென்றவர் — அடிப்படுத்தியவர்; விதியை வென்றவர்—காலனை வென்றவர் என்க. அருணோதயம் ஆன பின்னேயே முன்னிலைகளைப் பகுத்தறியும் வன்மை நமக்கு உளதாகும். இவ் அருணோதயமே குருதரிசனம்—நம்முள்ளே குருதரிசனம் பெறுதல் என்பது. இவ் அருணோதயம் பெறுதற்கே மெய்யடியார் பலகாலம் அரும்பாடுபட்டனர். அன்னார் அடைந்த துன்பங்கள் நம்மனோர் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவு படுவனவாகுமா? பின் வரும் பிரமாணங்கள் இவ் உண்மையை நன்கு புலப்படுத்தும்.

## திருவாசகம்.

ஏனை யாவரு மெய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை யானெயைக்கரும்பினின்றேறலைச்
சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக்
குறுகிலே னெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்றேன்
கெடுவேனுயி ரோயாதே.

(ஷை-திருச்சதகம்-ஆத்மசுத்தி செ. 8.)

## பட்டினத்தடிகள்.

கன்னிவன நாதா கன்னிவன நாதா
கடைக்கண்ணாற் பாராய் கன்னிவனநாதா
கந்தனை ஈன்றருளுங் கன்னிவன நாதா
எந்த விதத்தில் நான் ஏறிப்படருவண்டா
..........................................
காதல் தணியேனோ கண்டு மகிழேனோ
சாதல் தவிரேனோ சங்கடந்தான் தீரேனோ

(முதல்வன் முறையீடு.)

இவ்வாறு வரும் பிரமாணங்கள் பலவற்றால் அருணோதயம் பெறுதலின் அருமை அளவிடற்கு அரியது என்பது நன்கு புலப்படும். அப்பர் தம்முள்ளே தேடிக் கண்டு கொண்டதாகப் பின்வருமாறு கூறியதும்

## அப்பர்

தேடிக்கண்டுகொண்டேன், திரு-
மாலொடு நான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனை யென்னுளே,
தேடிக்கண்டுகொண்டேன்.

(ஷை-திரு அங்கமாலை செ. 12.)

மணிவாசகர் திருக்கழுக்குன்றத்தில் தாம் கண்டதாகப் பின்வருமாறு கூறியதும்

## திருவாசகம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவரும்
துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமலென் வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோல நீவந்து
காட்டினாய்க்கழுக் குன்றிலே.

(ஷை திருக்கழுக்குன்றப் பதிகம் செ. 1)

இவ்விரண்டும் அருணோதயமாகிய ஆசான் தரிசனத்தையே குறித்ததாகும் என அறிக. இதுவே அமல

முதற்படி; முத்திக்கு வாசற்படி. புறத்தே அருணோதயமாதற்கு அறிகுறியாகப் புள்ளொலி முதலியன கேட்கப்படும். அகத்தும் இவ்வாறே நாதங்கள் கேட்கப்படும்.

"உள்ளொலி நாதப் புள்ளொலி முழங்க" என ஆன்றோர் கூறியதும் அறிக. [நாதங்களின் இயல்பு திருமந்திரம், 3ம் தந், தியானம் செ. 9, 10. என்பனவற்றால் அறியப்படும்.]

நாதங்கள் சிவ சந்நிதானத்தில் ஓவாது ஒலிப்பனவாதலின் அச் சிவ சந்நிதானத்தை அடைபவரால் அவை கேட்கப்படவேண்டிய தொன்றுதலே. தம்முள்ளே அருணோதயம் ஆதற்கேற்ற அறிகுறி காணப்பட்டபோது தான் மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சித் திருப்பதிகத்தை அருளிச் செய்தனர். பின் வரும் திருவாக்குக்கள் இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்:

## திருவாசகம்

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு [நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு [மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு [ளாயே.

(ஷை திருப்பள்ளியெழுச்சி செ, 3.)

பின்வரும் இருக்கு வேதப்பிரமாணம் இவ் வுண்மையைத் தெளிவுற விளக்குவதைக் காண்க:

## இருக்கு வேதம்

அஷ்டகம் 1, அத்தியாயம் 6,
வருக்கம் 23.
மண்டலம் 1, அநுவாகம் 14, சூக்தம் 8.
இருக்குக்கள் 18.

நடமாதர்மானப்பல்லுருவவுடைதரித் [திருளைநாடியோட்டித்
தடமடியைப்பசுசுரக்குந்தன்மையினிற்றன் [னுரத்தைத்திறந்துகாட்டி
யிடமகலெல்லாப்புவனத்தினுஞ்சோதி [விரித்தாக்களியையுங்கோட்டத்
திடைநின்றுதாமாகவெளிப்படலி, [னுஷைதோன்றியிருள்சீப்பாளே. (4)

(இ-ள்.) நடனஞ்செய்யும் மாதரைப் போலப் பல நிறமான உடையைத் தரித்து இருளை யோட்டி, விசாலமான மடியைப் பசு சுரந்து காட்டுவது போலத் தனது மார்பைத் திறந்து காட்டி, இடமகன்ற எல்லா உலகங்களிலும் தனது ஜோதியை விரித்துப், பசுக்கள் கொட்டிலிலிருந்து தாமே வெளிப்படுவது போல உஷஸ் வெளித் தோன்றி இருட்டைச் சேதிப்பாள்—(எ.று.)

["ந்ரு தூரிவ" என்பதற்கு "ந்ரூம் ஸ்தூவர்தி ரிக்தீ கரோதி ந்ருதா : நாபித:" என்றும் ஒருபொருள் கூறுவர். மயிர் வினைஞனைப் போல இருட்டை வபனஞ் செய்து என்பது பொருள்.]

உரிய சாதகங்களைக் கைக்கொண்டு வழுவற ஒழுகினமையால் தம்முள்ளே அருணோதயம் ஆதற்கேற்ற குறிகள் காணப்பட்டு—நாத ஒலியாகிய வேத ஒலி கேட்கப்பட்டு, அதனால் "எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என மணிவாசகர் வேண்டியமை மேலே காட்டிய பிரமாணங்களால் நன்கு புலப்படும். அருணோதயம் ஆனபின்னேயே வாய்மையான தொண்டு புரிதற்கேற்ற காலமும் உளதாகும்.

## திருவாசகம்

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் திருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் [தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை [மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது [கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

(ஷை திருப்பள்ளியெழுச்சி, செ. 7.)

என அருளப்பட்டது காண்க. நினைத்தவையெல்லாம் கைகூடப் பெற்றுச் செய்வன செய்தற்கு ஏற்ற காலமும் இதுவே யாகும். பின் வரும் தேவர் திருவாக்கும் இவ் வுண்மையையே உணர்த்தி நின்றது.

## குறள்

வேண்டி னுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

(ஷை துறவு செ. 2.)

(இ-ள்.) வேண்டின் உண்டாக துறக்க—ஒருவன் தான் நினைத்தவற்றை யெல்லாம் அடைந்து உபரதி பெற்று உய்யுந் திறனை விரும்பினுனாயின், அப்பெற்றி கைகூடுமாறு தனது சரீரமாகிய இல்லைக் கைத்தாள் கொண்டு திறப்பானாக; துறந்தபின் ஈண்டு இயற்பால பல—அவ்வாறு துறத்தலால் அருணோதயம் ஆனபின் இவ்வுலகில் அவனால் உஞற்றற்பால அரிய செயல்கள் பல உள்ளன என்பதாம்.

தம் முள்ளே அருணோதயம் ஆகப் பெற்ற மெய்யடியாரோ தாம் நினைத்தவற்றை யெல்லாம் நிறை முறையோடு அநுபவித்து அவாவினை விண்டு உபரதி பெற்று உண்மைத் துறவிகளாய்ச் சீவ காருண்ணிய மூர்த்திகளாய்ச் செயற்கரிய செய்வார் பெரியர்.

## குறள்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(ஷை—3ம். அதி—நீத்தார் பெருமை செ. 6.)

எனத் தேவர் கூறியதும் அறிக.

"சையொத்திருந்தால் செய்வன செய்" என்னும் ஔவை திருமறையும் இவ் வுண்மையையே உணர்த்தி நின்றது. இதன் பொருள் அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

எம்பெருமான் உடலிடங் கொள்ள, அதனால் உடலுயிர் பூரண அமலமடை—

யப் பெறுவதும் அருணோதயமான பின்னேயே உளதாகும். நம்முள்ளே அருணன் உதயமானதும் பிண்டத்துள்ள அசுத்த நிறை ஒழிந்து, ஆலம் என்னும் விஷம் அமுதமாக மாறி ஊன் ஒளிமயமாகும்—உடல் ஊனம் நீங்கி ஒளி வடிவாகும் என்பது. பின்வரும் பிரமாணம் இவ் உண்மையை விளக்கிக் காட்டும்.

## இருக்கு வேதம்

**அஷ்டகம் 2—அத்தியாயம் 5.**
**மண்டலம் 1, சூக்தம் 194, அநுவாகம் 24, சூக்தம் 12,—16 இருக்குக்கள்.**

சூரியனிடத்திற்றொங்குவிப்பன்யான்
[விடத்தை கள்ளை
யேருற விற்போன் றேற்பை தம்மு
[ளம்தமைத்த லொப்ப;
சாரலனவனுஞ் சாவை, யாமுமே யதனைச்
[சாரோம்;
தூர மன்னவன் றன்பாதை; யரியினாற்
[சுமக்கப்பெற்றே
ணரு மாதுரியத் தேனா யாக்கினா னுன்னை
[மெய்யே. 10

(இ-ள்.) கள்ளைச் செய்து விற்பவன் றேற்பைகளில் அக் கள்ளை யூற்றி தொங்க விட்டு வைப்பது போல யான் விஷத்தைச் சூரிய வட்டத்திற் றொங்க விட்டு வைப்பேன். அவ் விஷம் பட்ட காரணத்தால் அவன் சாகமாட்டான். அச் சூரியனுடைய அருளுண்மையால் யாமுஞ் சாகமாட்டோம். அவனுடைய பாதை வெகு தூரத்திலுள்ளது. விஷமே! அரியென்னும் குதிரைகள் சுமந்து செல்லும் அச் சூரியன் உன்னை இனிமை வாய்ந்த மதுவாக (உண்மையாகவே) மாற்றிவிட்டான். (எ.று.)

இதனால் பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து நித்தியத்துவம் உளதாதல் திண்ணம்..அருணன் உதயமாகி அதன் ஆக்கத்தால் ஊனம் ஒழிந்தோர்க்குச் சாதல் ஏது? ஊனம் நீங்கிய உடலம் பிணமாகி விழுமா? விழும் என்பது இயற்கை விரோதமல்லவா? ஊனமற்ற வடிவத்துக்குச் சாதலைத் தரும் "ஐ" ஏது? சாதலைத் தரும் "ஐ" என்றால் என்னை? அது தான் சா+ஐ=சாயை என்பது. சாயையாகத் தோன்றுவது ஊனமே அல்லவா? ஊனமற்ற வடிவமே நிழற் சாயை இல்லாத வடிவம்—பிரணவ வடிவம் என்பது. இவ் வடிவ முடைய சீவன் முத்தரே ஞானாகாசத்தில் மறைதற்கு உரியவர். மெய்யடியார் உடலம் பிணமாகி விழுமாயின் அவர் உடலகத்துச் சிவம் எனும் அமலப் பேரொளி— அமல அக்கினி ஆக்கமுற்றதால் பயன் என்னை? அருணன் உதயமாகி ஆக்கமுறாமையால் ஊனம் நீங்கப் பெறாத உலக மாக்கள் உடலமே பிணமாகி விழுவது என்க. மெய்யடியார் உடலகத்து ஆக்கமுற்ற அருணன், அருணனாகிய அமலப் பேரொளியானது ஊனம் யாவற்றையும் விழுங்கி ஒளிமயமாக்கி யாவும் தானேயாய் யாண்டும் நிறைந்த அருவமான அகண்டாகார அருட்பெருஞ் சோதி யோடு ஒன்றாய் நின்றிடும் என்க. விசுவக்கிராசம் என்பது இதுவே. அருளாய் வெளியாய் உலகு கண்டு போற்ற மறைதல் என்னும் உண்மை முத்தி நிலை இதுவே என அறிக. பின்வரும் பிரபல சுருதிப் பிரமாணம் இவ்வுண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க:

## திருமந்திரம்

அளந்து துரியத் தறிவினை வாங்கி
யுளங்கொள் பரஞ்சக முண்ட தொழித்துக்
கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியனு மாமே.

இரும்பிடை நீரென வென்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
யுரம்பெற முப்பா ழொளியை விழுங்கி
யிருந்தவென் னந்தி யிதயத்து ளானே.

கரியுண் விளவின் கனிபோ லுயிரு
முரிய பரமுமுன் னோதுஞ் சிவமு
மரிய துரியமே லகிலமு மெல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே.

(ஷை—8. தந். 27-வது விசுவக்கிராசம்
செ. 5, 6, 7.)

விசுவக்கிராசம் என்றால் என்னை? அதுதான் அருட் பெருஞ் சோதி என்னும் அமல அக்கினியானது— சிவபரஞ்சுடரானது உலகத்தைவிழுங்குதல் - பிண்டமாகிய உடலுயிரை விழுங்குதல் என்பது. (விசுவம்—உலகம்; கிராசம்—பற்றுதல், விழுங்குதல்) நம் உடலகத்துச் சோதி ஆக்கமுற்றதனால் ஆய பயன்—அருணோதயத்தினால் ஆய பயன் இதுவே என அறிக. அருணன் உதயமாகி ஆக்கமுறுவதாலன்றிப் பிறவாறு மாயா சம்பந்தம் நீங்கப் பெறுதல்—ஊனம் ஒழிதல்—மாயையைக் கடத்தல் — நித்தியத்துவம் பெறுதல் என்பது முயற்கொம்பே யாகும்—பித்தன் கூற்றேயாகும்.

உலகில் உள்ள இடுகுறித் தலங்களில் அதிகாலையில் நிகழும் திருப்பள்ளியெழுச்சி விழவும் பூசையும் இவ் அருணோதயத்தைக் குறிக்கும் கற்பனையே யாகும். ஏனைய் ஆலயக் கிரியைகளும் இதுபோன்ற அரிய பெரிய உண்மைகளையே குறித்தனவாகும். ஆதலால் கற்பனைகளால் உண்மை கடைப்பிடித்து உய்தியடைவதே முறையாகும். அன்றி அவற்றைப் புறக்கணிக்கத் துணிவதும் அவற்றையே உண்மை என நம்பி அமைவதும் உய்யுந்திறன் ஆகா என்க.

இது காறும் கூறியவைகளால் நம்முள்ளே அருணோதயம் பெறுதலின் அருமையும், ஊனத்தை—ஊனமாகிய மாயையை ஒளி மயமாக்கித் தானாகச் செய்யும் அவ் அருணன் என்னும் சிவபரஞ் சுடரின் இயல்பும், நம்முள்ளே அருணோதயம் ஆகி ஆக்கமுறுதலாலன்றி வேறு எவ்வாற்றானும் ஊனம் நீங்குதல்—பிறவி ஒழிதல்—முத்தியடைதல் என்பது அசம்பாவிதமே என்பதும், அருணன் ஆக்கமுறப் பெற்றோர் உடலம் ஊனம் நீங்கி ஒளிமயமாய் அகண்டாகார அருட்பெருஞ் சோதியுடன் ஒன்றுவதே யன்றிப் பிணமாகி விழுதல் என்பது இயற்கை விரோதமே என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

# ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்

**வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்**

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(27-ம் வாரத் தொடர்ச்சி).

## நெல்லைநாத முதலியார்

இவர் ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்திலே தென்கோவையைச் சார்ந்த இருபாலை என்னும் ஊரிலே இருந்தவர். உயர்ந்த வேளாண் குடிமரபிற் பிறந்தவர். ஞாபக சக்தியில் இணையற்றவர். இவர் ஞாபக சக்தியைக் குறித்து முன்னோர் ஒருகதைகூறுவர். அக்கதை; வணிகர் குலப்பெரும் பிரபுவும், வள்ளலுமாய் விளங்கிய வண்ணை வைத்தியலிங்கச் செட்டியார் மீது ஒரு பிரபந்தம் பாடிக்கொண்டு வந்த செந்திக் கவி என்னும் வடதேயப் புலவர் ஒருவர் செட்டியாரைக் கண்டு தமது கருத்தைத் தெரிவிக்க,

செட்டியார் தம்மாற் கட்டுவிக்கப்பட்ட வண்ணை வைத்தீஸ்வர ஆலய மண்டபமே அக்கவியை அரங்கேற்றுதற்குரிய இடமாக நியமித்து, யாழ்ப்பாணத்துள்ள பல வித்துவான்களுக்கும் திருமுகம் அனுப்பினார். அத்திருமுகத்தை நோக்கிய வித்துவான்கள் பலரும் அம்மண்டபத்தில் வந்து கூடினர். அப்போது நெல்லைநாத முதலியாரும் அங்கு வந்தனர். வந்தபோது அங்கிருந்த வித்துவான்களும், பிரபுக்களும், செட்டியாரும் எழுந்து இவரைச் சன்மானித்தனர். வடதேயப் புலவர் மாத்திரம் எழுந்து இவருக்குச் சன்மானம் செய்யாது இறுமாந்திருந்தனர். பின் செட்டியார் ஆஞ்ஞைப்படி அவ்வடதேயப் புலவர் பிரபந்தத்தைப் படித்தனர். அப்போது செட்டியார் அங்கிருந்த வித்துவான்களுள் சிரேட்டராய் விளங்கிய இவரை நோக்கிப் பிரபந்தம் எப்படி என்று கேட்டனர். இவர் வடதேயப்புலவரின் இறுமாப்பை அடக்க நினைந்து புலவர் பாடியது பழைய பாடலே எனக்கும் ஞாபகமே என்று அப்பிரபந்தச் செய்யுளை அப்படியே ஒப்பித்துவிட்டனர். உடனே வடதேயப் புலவர் திகைத்து நாணி எழுந்து இவரை நமஸ்கரித்து தாஞ் செய்த குற்றத்தை பொறுக்குமாறு வேண்டிக்கொண்டனர். பின் இவர் செட்டியாருக்கு உண்மை கூறி, அப்புலவருக்கேற்ற சன்மானஞ் செய்யும்படி கூறினர். செட்டியார் வடதேயப்புலவரை நோக்கி, யான் உமக்குச் சன்மானமாக வழங்கும் இப்பணத்தில் பாதி உமது பிரபந்தத்திற்காகவும், பாதி இப்பிரபந்தத்தைப் படிக்கும்போது ஓரே முறையில் அவதானித்து, மீள அப்படியே ஒப்பித்துப் பழம் பாட்டெனக்கூறி உம்மை அவமானஞ் செய்த முதலியார் அவ்வவமானத்தை நீக்கும் பொருட்டு உமக்குத் தந்ததாகவும் தருகிறேன் என்று இரண்டாயிரம் ரூபா பரிசில் அளித்தனர் என்பது.

இதனால் இவருடைய ஞாபகசக்தி எத்துணைய தென்பது நாம் அறியக் கிடக்கின்றது. இவர் எவரிடம கற்றனர் என்பது தெரியவில்லை. சிலர் கூழங்கைத் தம்பிரானிடம் கற்றனர் என்ப. இவர் காலத்திலே இருபாலையே ஒரு வித்தியா பீடமாயிருந்தது. கற்போர் பலரும் அங்கேயே போய்க் கற்பர். கவியரங்கேற்றுவோரும் அங்கே போய் இவர் முன்னிலையிலேயே அரங்கேற்றுவர். இவர் காலத்திலே இருந்த யாழ்ப்பாணக் கச்சேரி முதலியார் மீது "இன்ப கவி" என்னும் ஒருபுலவர் பிரபந்தம் பாடிவந்த போதும் இருபாலையிற் சென்று இவர் முன்னிலையிற் அரங்கேற்றினர் என்ப. இவர் இலக்கண இலக்கியங்களில் வல்லவராய் இருந்த தன்றி, பாடுவதிலும் வல்லவராய் இருந்தனர். இவரியற்றிய நூல்களாயினும், தனிச் செய்யுள்களாயினும், இப்போது கிடைத்தலரிதாயின. இவரும் இவர் புதல்வர் சேனாதிராய முதலியாரும் வறிய மாணவர்களுக்கு அன்னமளித்துக் கற்பித்தனர் என்றும் கூறுப.

## சேனாதிராய முதலியார்

இவர் மேற்கூறிய நெல்லைநாத முதலியாருடைய அருந்தவப் புதல்வர். இவர் தமது தந்தையாரிடத்தும் கூழங்கைத் தம்பிரானிடத்தும் மாதகல் சிற்றம்பலப் புலவரிடத்தும் இலக்கிய இலக்கணங்கள் கற்றவர். கூழங்கைத்தம்பிரானிடம் பெருந்தொகைப் பொருள் கொடுத்து நாற்பது நாளையில் நன்னூல் கற்றுணர்ந்தவர். தந்தையார்போல ஞாபகத்திற் சிறந்தவர். ஆங்கில பாஷையும் போத்துக்கேய

பாஷையுங் கற்றுணர்ந்தவர். நியாயஸ்தலத்திலே நியாயதுரந்தரராகியும் துவிபாஷகராயுமிருந்து உத்தியோகம் நடாத்தியவர். சிலகாலம் கோவைக் கோவிற்பற்றுக்கு மணியகார தாசில்தார் உத்தியோகம் வகித்தும் இருந்தவர். அக்காலத்திலே கல்வியினன்றி, செல்வம், அதிகாரம், குலம், குணம், ஒழுக்கம், சைவ சீலம் முதலியவற்றிலுஞ் சிறந்தவரெனப் போற்றப்பட்டவரும் இவரே. அன்றியும், இவர் தங்காலத்துள்ள வித்துவான்களுக்கெல்லாம் ஒரு சிரோமணியாயும் விளங்கினர். இவரிடம் நெடுங்காலம் கல்விகற்றுத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பலர். அவருள் சிறந்த வித்துவான்களாய் விளங்கினோர், நல்லூர் சரவணமுத்துப் புலவர், தென்கோவை அம்பலவாண பண்டிதர், நீர்வேலி பீதாம்பரப் புலவர் முதலாயினோர். யாழ்ப்பாணத்திலே தமிழ்க் கல்வியையும் சைவ சமயத்தையும் நிலை நாட்டி வைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களும் இவரிடங்கற்றவரே யாவர். இவர், அரச உத்தியோகத்திலிருக்கும்போது ஐரோப்பிய உத்தியோகத்தர்கள் பலர் இவர்பால் தமிழ்க் கல்வி பயின்றுள்ளார்களென அறிகின்றோம். அக்காலத்திருந்த புலவர்களுள் இவரிடம் கல்வி கல்லாதவரும் சந்தேகம் கேட்டுத் தெளியாதவரும் இலர். பொதுப்படக்கூறுகில் அக்காலத்தில் இவராலே யாழ்ப்பாணத்தில் தமிழ் விருத்தி அடைந்ததெனலாம். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் முதலிற் புராணப் பிரசங்கஞ் செய்தவரிவரே. இவருக்குப்பின் அப்பிரசங்கத்தை; அவர் மாணவர் சரவணமுத்துப் புலவரும் இவர்பின், இவர்க்கும் அவர்க்கும் மாணவராய ஆறுமுக நாவலரும், நாவலர்க்குப் பின் அவர் மாணவர் பொன்னம்பல பிள்ளையும் நடாத்தி வந்தனர் என்ப. இவர் நல்லூர்க் கந்தசுவாமியார் மீது மிகு பக்தி வாய்ந்தவர். அதனால் அவர் மீது நல்லை வெண்பா நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி, முதலிய பிரபந்தங்களும், நீராவிப்பிள்ளையார் மீது ஓர் கலிவெண்பாவும் பல தனிக் கவிகளும் செய்துள்ளார். தனிக் கவிகள் நல்லூரிலிருந்தமது ஆபீசிலிருந்து கந்தசுவாமியைத் தரிசனஞ் செய்யச் செல்லும் அவ்வப்பொழுது வழியிலே பாடியன என்பர். மாவிட்டபுரம் சுப்பிரமணியக் கடவுண் மீதும் ஊஞ்சல் பதிகம் முதலியனவும், வேறும் பல தலங்கண்மேல் ஊஞ்சல் பதிகங்களும் பாடினர் என்ப. அவற்றுள் நல்லை வெண்பா; பாடங் கேட்டுப் படிப்போரால் பலவாகத்திரித்து எழுதப்பட்டு தன் சொரூபம் பலவாகத் திரிவு பட்டது எனினும், அவர் மாணவர் அம்பலவாணபண்டிதரால் பின்னுளில் அது ஒருவாறு திருத்தி அச்சிடப் பட்டுள்ளது. ஏனைய நூல்கள் இப்போது அகப்பட மாட்டா.

(தொடரும்.)

## சுத்தசாதகம்

துறவின் றன்மையையும், தேகம் சித்திபெற்றால் முத்தியுண்டாமென்பதன் றன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் றன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் றன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றி யிருக்கும் வகையையும், தத்துவஞானத்திற்குப் பரம்பரா சாதனமாயுள்ளவைகளின் றன்மையையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூல் துக்க நிவர்த்தியிலும் பரமாநந்தப் பிராப்தியிலு மிச்சையுள்ள ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாய் அறிய வேண்டற்பாலதா மென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் அணு 0—2—9 தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.
புதுவை, (F. India.)

## திருவாசக உண்மை.

தென்கோவை தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான், ச. கந்தையபிள்ளை
(வித்தகப் பத்திரிகை
பேராசிரியர்) அவர்களால்
எழுதப்பட்டது

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவி யருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய

**திருவாசகத்தின்**

உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 2¾ அணு தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

## “வித்தகம்.”

### வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர் சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

——o-o——

## அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

Le Gérant, R.Nagarattinam
Sandhanam Printing Works, Pondicherry.